No:56:07 Price: Rs.10.00

Herald of Deliverance

விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

JULY 2012

நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

என் இதயங்கனிந்த அன்பின் வாழ்த்துதல்கள்.

இந்நாட்களில் தேவனுடைய பிள்ளைகளிடையே காணும் ஐக்கியமின்மை என்னுள்ளத்தில் மிகுந்த பாரத்தை உண்டாக்குகின்றது. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட நமது வட்டாரத்தில் எழுப்புதல் உண்டாகவும் நமது தேசம் கிறிஸ்துவுக்காக மாற வேண்டுமானால் சபை மக்களிடையே, சிறப்பாக, நமது சபையிலே விசுவாசிகளுக்கும் ஊழியருக்குள்ளும் ஒருமனதுடன்கூடிய அன்பு வேண்டும்.

“பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்” (அப்.2:1).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், மேல்வீட்டறையில் நூற்றிருபதுபேரும் ஒருமனப்பட்டு வந்து ஜெபித்தபோதுதான் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். ஒருமனதோடுகூடிய ஐக்கியம்தான் பேராசீர்வாதத்தைத் தரும்.

“அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று” (அப்.2:14).

இங்கு, எழுத்தின்படி பதினொருவரோடுங்கூட பேதுரு எழுந்து நின்றதாக நாம் கூறமுடியாது. அவ்விதம் பொருள்படுத்துவதும் சரியல்ல. அவர்களுக்குள் ஒருமனதின் ஆவி காணப்பட்டது என்பதையே இவ்வசனம் பொருள்படுத்துகின்றது. அதனால்தான் அன்று பேதுரு பிரசங்கித்தவேளையில் மூவாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டனர்.

“அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்” (அப்.2:46,47).

அன்பானவர்களே! இன்று நமது சபை மக்களிடையே போதிய ஒருமனம் இல்லை. அதனால்தான் நாம் பெரும் எழுப்புதலைக் காணமுடியவில்லை. தெற்கத்தி வெள்ளம் திரும்புவதுபோல், புறஜாதியார் இயேசுவின்பால் திரும்பவில்லை. மற்றவர்மேலுள்ள தவறான எண்ணங்களையும், கசப்புகளையும், வருத்தங்களையும் இயேசுவின் நாமத்தில் நாம் நீக்குவோம். வீட்டிலும், சபையிலும், தேசத்திலும் எழுப்புதலைப் பெற்று வாழுவோம்.

அடுத்து, தேவனுடைய பிள்ளைகள் ஒருவர்மேலொருவர் குறைகாணுவதும் குறைகூறுவதுமாய்க் காணப்படுகின்றனர். இது தேவன் விரும்பாத செயல். **“... தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே”** (ரோமர் 14:4) என வேதம் கூறுவதால், மற்றவர்களது குறைகளைக்குறித்துப் புறங்கூறித் திரிவதும், நிந்திப்பதும், சண்டையிடுவதும் தகாதசெயல்கள் ஆகும். விசுவாசிகள் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து, ஒருமனப்பட்டு வாழுவது அவசியம்.

இயேசு கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். அவரது இரகசிய வருகைக்கு ஆயத்தப்படுவோம். அவரது வருகைக்குப் பின்பு உபத்திரவக் காலத்திற்குத் தப்புவோம்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புள்ள

R. K. Sam

நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

இன்றைய உலகில் இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர், புத்தமதத்தவர், சீக்கியர் போன்ற பல பிரிவினரும், தங்கள் தங்களுக்குரிய பிரத்தியேகமான ஆலயங்களுக்குச் சென்று, தங்களது தெய்வங்களை வழிபட்டுவருகின்றனர். ஆலயம் என்பது, ஒரு கோணத்தில் மக்கள் வழிபடும் இடங்களைக் குறிப்பிடினும், அதன் உண்மைப்பொருள் அதுவல்ல. கிறிஸ்தவ வேதாகமத்தின்படி ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தேவனுடைய ஆலயமாயும், இயேசுகிறிஸ்துவின் திருச்சரீரமாயும் கணிக்கப்படுவர்.

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரி. 6:19,20).

நமது சரீரம் தேவனுடைய ஆலயம் என்பதை மேற்காணும் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனை ஒரு மண்பாண்டம் என நாம் எண்ணி, நமது சரீரத்திற்கு மதிப்புக் கொடுக்கிறதில்லை. *"உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து"* என்று பவுலடியார் கூறியுள்ளது முக்கியத்துவம் வாய்ந்தது. ஆம், நாம் ஒவ்வொருவரும் நமது சரீரத்தைத் தேவனுடைய ஆலயமாக மதித்து, அதனைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளுவது அவசியம்.

1 கொரிந்தியர் 6:19,20 ஆம் வசனங்களில், நமது சரீரத்தைக்குறித்து ஐந்துவிதமான முக்கிய அம்சங்களைத் தேவன் வெளிப்படுத்தியுள்ளார். அவை: நமது சரீரத்தின்மேல் தேவனுக்கு இருக்கும் உரிமை, தேவனின் ஆலோசனை, தேவனின் எச்சரிக்கை, தேவனுடைய பராமரிப்பு, தேவனின் கட்டளை என்பனவாகும்.

நமது சரீரத்தின்மேல் தேவனுக்கு இருக்கும் உரிமை

"உங்கள் சரீரமானது ... பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா" (1 கொரிந்தியர் 6:19)?

அன்பானவர்களே! உங்களுடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பாகிய கண், காது, கை, கால் போன்றவற்றைக்குறித்து உரிமை பாராட்ட உங்களுக்கு அதிகாரமேயில்லை. தேவனே உங்களுடைய சரீரத்தின் உரிமையாளர் என்பதை நினைவுகூருங்கள். உங்களுடைய விருப்பம்போல உங்களுடைய சரீரத்தின் உறுப்புகளைப் பயன்படுத்தக்கூடாது.

"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது..." (ஏசாயா 43:1): என்றுள்ள, இவ்வசனத்தின் வாயிலாகத் தேவனே நம்மைச் சிருஷ்டித்தவர் மட்டுமன்றி, உருவாக்கினவருமாவார் என்பது தெளிவாகின்றது.

தேவன் நம்மைச் சிருஷ்டித்தவராதலால், நம்மீது அவருக்கு முழு உரிமையும் உண்டு. பூமியிலிருந்து மண்ணை எடுத்துப் பிசைந்து, தமது திருக்கரங்களால் தம்முடைய

சாயலிலேயே நம்மைச் சிருஷ்டித்து, தம்முடைய ஜீவ சுவாசத்தை நமது நாசியிலே ஊதினார். அதனால் சிருஷ்டிகருக்குத் தம் சிருஷ்டியான நம்மீது முழு உரிமையும் அதிகாரமும் உண்டு என்பது நன்குப் புலனாகின்றது.

தேவபிள்ளைகளாகிய நாம், "என்னைச் சிருஷ்டித்தவரே, உமது ஜீவ சுவாசத்தை எனது உயிர்மூச்சாய்த் தந்தவரே, உமக்கு நன்றி" என்று கூறுவதுதான் ஏற்புடைத்து.

தேவன் நம்மைச் சிருஷ்டித்துவிட்டு, அவ்விதமே விட்டுவிடுகிறவர் அல்லர். தம் சாயல் நம்மில் காணப்பட, அனுதினமும் நம்மைச் சீர்ப்படுத்தி உருவாக்குகிறவருமாயுள்ளார் என்பதை, ஏசாயா 43:1 இல் காணலாம். முதலில், *'சிருஷ்டித்தவரும்'* என்றும் பின்னர், *'உருவாக்கினவருமாகிய கர்த்தர்'* என்றும் அவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அவரது கிரியையின் வரிசைக்கிரமத்தை நன்குத் தெளிவிக்கின்றது.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபோது 'யாக்கோபு' என்ற பெயரைப் பெற்றவன், அவர் தமது சாயலாக அவனை உருவாக்கினபோது, "இஸ்ரவேல்" என்று அழைக்கப்பட்டான்.

முன்னர் யாக்கோபு தனது அண்ணனது சேஷ்டபுத்திர பாகத்தைத் தனது தந்திர வார்த்தைகளால் பெற்றுக்கொண்டான். பின்னர், மாறுவேடம் பூண்டு தன் தகப்பனிடமிருந்து அண்ணன் ஏசாவின் ஆசீர்வாதத்தையும் களவாய்ப் பெற்றுக்கொண்டான். 'எத்தன்' என்று பொருள்படும் 'யாக்கோபு' என்ற பெயரை முதலில் அவன் பெற்றிருந்தது சரியே. தன் தவறை உணர்ந்துகொள்ளும் காலம் ஒருநாள் வந்தது.

யாக்கோபு தன் மனைவிமார்களோடும் தன் பிள்ளைகளோடும் பதான் ஆராமிலிருந்து, கானான் திரும்பும் வழியில், தேவனால் சந்திக்கப் பட்டான். யாப்போக்கு என்கிற ஆற்றைக்கடந்து, தன் குடும்பத்தாரை அக்கரைப்படுத்தின பின்பு, தேவனோடு தனித்திருந்து, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக... மாட்டேன்" என்று போராடி ஜெயித்த... தன்னைத் தாழ்த்தினான். ஆகவே, தேவ... ஆசீர்வதிக்கப்பட்டான். தேவன் அவன் சாய... மாற்றினார். அவனைப் பிரபுவாக உருவ... னார். ஆகவே, அவன், "இஸ்ரவேல்" எ... அழைக்கப்பட்டான். யாக்கோபு என்பவன்... பின்னர் இஸ்ரவேலாக உருவாக்கப்பட்டான்.

ஆம், மனிதனைச் சிருஷ்டிப்பவரு... பின்னர் தம்மைப்போல் அவனை உருவா... பவரும் தேவனேயன்றி வேறொருவர் இ... மனிதன் தனது சுயமுயற்சியால் தேவசாய... உருவாகமுடியாது. இரட்சிப்பைப் பெற்... தங்களது பழைய மனிதனின் சுபாவங்க... குடி, புகைபிடித்தல் போன்றவற்றில் திரும்... திரும்பத் தவறி விழுபவர்கள் மீண்டும் தே... சாயலைப் பெறவேண்டுமாயின், வேத வச... களை அறிக்கை செய்யவேண்டும்.

"... இனி நான் அல்ல, கிறிஸ்து... எனக்குள் பிழைத்திருக்கிறார்;..." (கலாத்தி... 2:20) என்று அனுதினமும் விசுவாசி... அறிக்கை செய்வார்களாயின், வேதவசன... அவர்களைத் தேவசாயலாக மாற்றும்.

அன்பானவர்களே! உங்களுடைய சரீ... தேவனாலே பெற்றது என்ற உணர்வை... தேவனால் பெற்றுக்கொள்ளும்போது, நீங்க... தேவசாயலாக உருவாகமுடியும்.

லேவியராகமம் 26:20 இன்படி, நீங்க... மற்ற ஜனங்களிலிருந்து தேவனுக்கென்... பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை நினை... கூரவேண்டும். "நான் தேவனுக்குச் சொ... மானவன்" என்ற உணர்வு, தொடர்ந்... உங்களுக்குள் கிரியை செய்துகொண்டேயிரு... வேண்டும். ஆம், நீங்கள் தேவனின் சிருஷ்டிக... தேவனாலே உருவாக்கப்படுகிறவர்கள்.

ஆகவே, தேவனுக்கு உங்கள்மீது மு... உரிமையுண்டு என்பதை நினைவுகூருங்... களாக. தேவனிடம் உங்களை முற்... அர்ப்பணித்துக் கீழ்ப்படிவீர்களாக.

ஆராதனையும் தேவனின் ஆலோசனையும்

"உங்கள் சரீரமானது ... பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், அறியீர்களா" (1 கொரி. 6:19)?

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், அறியாதிருக்கிறீர்களா" (1 கொரி. 3:16)?

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; ... நீங்களே அந்த ஆலயம்" (1 கொரிந்தியர் 3:17).

சபைகூடிவருமிடம் தேவாலயம் என்று அழைக்கப்படுவதுபோல, நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்டதோர் தேவாலயம் என்பதை, மேற்காணும் வசனங்கள் விளக்குகின்றன. கர்த்தரைத் துதிப்பதற்காகவும், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவும், உபதேசிக்கவும் நாம் தேவாலயத்திற்குச் செல்லுகிறோம். சிலர் தேவனை ஆராதிப்பதற்காகத் தேவாலயத்திற்கு வராமல், தேவனுடைய செய்திக்குமட்டும் முக்கியத்துவம் கொடுத்து, காலந்தவறி வருகின்றனர். இது தவறு.

"ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தைவிட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள்" (லூக்கா 2:37).

"நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்..." (லூக்கா 24:53).

"அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு,..." (லூக்கா 24:52),

மேற்காணும் வசனங்களினால் நமது துதிகளுக்குத்தான் தேவன் முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது தெளிவாகிறது.

எண்பத்திநான்கு வயதுள்ள அன்னாள் தேவனைத் துதிப்பதற்காகமட்டும் ஆலயத்திற்குச் சென்று, அவ்விடத்தைவிட்டு நீங்காமல் இருந்தாள். இக்காலத்தில் 65,75 வயது நிரம்பப்பெற்றவர்கள், "எனக்கு வயதாகிவிட்டது, மழை வருகிறமாதிரியிருக்கிறது" என்றெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லி, ஆலயத்துக்கு வருகிறதில்லை. அன்னாள் பாட்டி உபவாசத்துடன் தேவாலயத்திற்குச் சென்று துதித்துக்கொண்டிருந்தாள். எந்தத் தடையும் அவளை மேற்கொள்ளவில்லை என்பதை அறிக.

அன்பானவர்களே! உங்களுடைய உள்ளத்திலிருந்து தேவனை ஆராதிக்கும் ஆவி எழும்பிக்கொண்டேயிருத்தல் வேண்டும். வீட்டில் சமையல்வேலை செய்யும்போதும், துணியைச் சுத்தம்செய்யும்போதும், உலக வேலைக்குச் செல்லும் போதும், எல்லா நேரங்களிலும், தேவனைத் துதிக்கும் துதியானது தூபம்போல உங்கள் உள்ளத்திலிருந்து தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கவேண்டும். ஏனெனில், நீங்களே தேவனுடைய ஆலயம் என்பதை உணருங்கள்; எப்போதும் தேவனைத் துதித்துக் கொண்டிருங்கள்.

"... நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே" என்றார் (மத்தேயு 26:55).

தேவாலயத்தில் இயேசு தமது உபதேசத்தினால் மக்களுக்கு நல்லாலோசனை வழங்கிவந்தார். தேவனுடைய ஆலயமாக விளங்கும் நாமும் மக்களுக்கு வேதவசனங்களை உபதேசித்து, அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவேண்டும். கப்பர்நகூமில் வீட்டில் இருந்தபோதும் இயேசு ஜனங்களுக்கு ஆலோசனைகளை உபதேசமாக வழங்கினார். நாம் வீட்டிலிருந்தாலும் வெளியே சென்றாலும் கிறிஸ்து இயேசுவைப்போல வேதவசனங்களால் நம்மோடிருப்பவர்களுக்கு ஏற்ற ஆலோசனை கொடுக்கவேண்டும். நமது சரீரமாகிய தேவாலயம் வேதவசனத்தின் ஒரு

கிடங்காய் அமைந்தால்மட்டுமே நாம் மற்றவர் கட்கு நல்லாலோசனை வழங்கமுடியும்.

அன்பானவர்களே! இயேசுகிறிஸ்து உயிர்த்தபின்பு, பதினொருவரும் ஜெபித்துக் கொண்டிருந்தவேளையில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அப்பொழுது பேதுரு பதினொருவரோடுகூட எழுந்துநின்று, மனந்திரும்புதல், ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல், மாறுபாடான பாவசந்ததியைவிட்டு விலகி வாழுதலாகிய தேவ ஆலோசனையை அங்குக் கூடிவந்த மக்களுக்கு அதிகாரத்தோடு போதித்தார். ஆம், தேவாலயமாகிய நீங்கள் தேவனைத் துதித்து ஆராதிக்கவேண்டும். தேவ வசனத்தால் நிரம்பி, தேவ ஆலோசனையைக் கொடுக்கிறவர் களாகவும் பூரண சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற வர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தேவ எச்சரிப்பு

"... நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா" (1 கொரி. 6:19)?

ஆம், அன்பானவர்களே! உங்களுடைய சரீரத்தின் உறுப்புக்களான கண்கள், கைகள், கால்கள் போன்ற அனைத்தும் உங்களுக்குச் சொந்தமானவையல்ல என்று தேவன் இங்கு எச்சரிக்கிறார். உங்களுடைய விருப்பம்போல உங்களது சரீர உறுப்புக்களை நீங்கள் உபயோகப்படுத்தக் கூடாது; உபயோகப்படுத் தவும் முடியாது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் பாவத்திற்கும், உங்களுடைய சுயத்திற்கும் மரித்தவர்களாக விளங்கவேண்டும்.

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு," (1 பேதுரு 2:24). *"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீர மானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்"* (ரோமர் 8:10) என்று வேதத்தில் காண்கிறோம்.

பாவமும், பாவப்பழக்கங்களும் உங்கள் கிரியை செய்ய முற்படும்போது, உங்களுடைய சரீர அவயவங்கள் அதற்கு இசைந் கொடுக்கக்கூடாது. மரித்துப்போனவர்களை பாவஞ்செய்யும்படி, பாவம் தூண்டமுடியுமே செத்த சரீரத்தைப் பாவம் தன்வசப்படுத்த முடியுமோ? முடியாது. ஏன்? சரீரம் மரித்து கிடக்கிறதை அப்பாவம் காண்கிறது. *"ஞான ஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், ..."* (கொலே. 2:12) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்போது, செத்துப்போன உங்கள் சரீரத்தை, அத்தண்ணீரில் புதைத்து அடக்கம் பண்ணுகிறீர்கள் என்பதை உணருங்கள் உங்களுடைய பாவசரீரம் அடக்கம் பண்ண பட்டபின்பு, நீங்கள் பழைய பாவச்செயல்களி மீண்டும் ஈடுபடுவீர்களானால், உங்களுடை சரீர உறுப்புக்கள் முற்றும் தேவனுக் அர்ப்பணிக்கப்படவில்லை என்பது புலனாகு

நீதிமொழிகள் 6:17,18 இல், தேவனுக் அருவருப்பான ஏழுகாரியங்கள் கூறப்ப டுள்ளன. மேட்டிமையான பார்வை, பொ பேசும் நாவு, தீங்கு செய்வதற்கு விரைந் ஓடும் கால் போன்ற துர்க்குணங்கள், மரித் சரீரத்திற்குள் புகுந்து செயல்படமுடியாது. ஏன அச்சரீரம் மரித்துக்கிடக்கிறது. இந்த உண எப்போதும் உங்கள் சிந்தையை ஆட்கொள் வேண்டும்.

உங்களது சரீரம் உங்களுக்குச் சொந் மானது அல்ல. உங்களது சரீர உறுப்புக்க அனைத்தும் தேவசித்தத்தைமட்டுமே செய படுத்தவேண்டும் என்று தேவன் எச்சரிக்கிற விழிப்படைவீர்களாக.

அடுத்து, உங்களைக்குறித்த சு பரிதாபமும், சுயநலமும் உங்களுக்குள் ச வேண்டும். பாபிலோன் தேசத்து இராஜாவ நேபுகாத்நேச்சார் தான் கட்டின அரண்மனையை குறித்து, "நான் கட்டின மகா பாபிலோ

அல்லவா" என்று கூறி, தற்பெருமை கொண்டான். அதுபோலவே யெரொபெயாம், தன் மனதிலே தானே நியமித்துக்கொண்ட ... பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங் காட்டினான்" என்று வேதத்தில் வாசிக்கிறோம். இதுவும் தன் சுயநலத்தின்படி நடப்பித்த காரியம். இக்காரியங்களைத் தேவன் வெறுக்கிறார். உங்கள் சரீரம் சுயத்திற்கும் செத்ததாக இருக்கவேண்டும்.

நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியுங்கள். உங்கள் சரீர அவயவங்கள் அனைத்தும் தேவனுக்குச் சொந்தமானவை என்பதை எப்போதும் உணருங்கள்.

தேவன் விலைக்கிரயங்கொடுத்து வாங்கின நமது சரீரத்தின் பராமரிப்பு

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" (1 கொரிந்தியர் 6:20);

ஆம், தேவன் தமது இரத்தமாகிய கிரயத்தைச் செலுத்தி, நம்மைத் தமக்கென மீட்டெடுத்துள்ளார். ஒருநபர் ஒருபொருளைக் கிரயம் கொடுத்து வாங்குவாரானால், அவர் அப்பொருளைப் பாதுகாத்துப் பராமரிப்பதில் மிகுந்த கரிசனை கொள்ளுவார் அல்லவா?

அதுபோல, தேவன் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கொடுத்து, நம்மைத் தமக்கெனச் சொந்தமாகக் கொண்டுள்ளதால், மிகுந்த கரிசனை கொண்டு நமக்குப் பாவமன்னிப்பையும், மிகுந்த சமாதானத்தையும் அளித்து, நம்மைப் பராமரிக்கிறார்.

இயேசு தமது கடைசி திருப்பந்தியின் நேரத்தில், *"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது"* (மத்தேயு 26:28) என்றார். நாம் கர்த்தரது திருப்பந்தியில் அருந்தும் திராட்சரசம், அவரது விலையேறப்பெற்ற இரத்தத்திற்கு ஒப்பானது. அது நமது பாவமன்னிப்புக்காகக் கொடுக்கப்பட்டது.

மட்டுமன்றி, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் நம்மைக் கிரயங்கொண்டதால் அவர் நமக்கு மிகுந்த சமாதானத்தையும் அளிக்கிறார்.

"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, ..." (கொலோசெயர் 1:20) என்று வேதத்தில் காண்பது, இதனை உறுதிப்படுத்துகின்றது. ஆம், தமது இரத்தத்தை விலைக்கிரயமாக இயேசு அளித்துள்ளதால், எவ்விதக் கொடிய பாவிக்கும் மிகுந்த சமாதானம் கிட்டும்.

விபசாரப் பாவத்தில் கையும்மெய்யுமாய்ப் பிடிபட்ட ஸ்திரீக்குப் பாவமன்னிப்பு ஈந்து, தமது மிகுந்த சமாதானத்தை அருளினார். இயேசுவின் மரணத்திற்குப் பின்பு, பயத்துடன் பூட்டிய அறைக்குள் இருந்த தமது சீஷர்களிடம் இயேசு சென்று, *"உங்களுக்குச் சமாதானம்"* என்றார். எந்தச் சூழ்நிலையிலும் சமாதானம் அருளும் தெய்வம் இயேசு கிறிஸ்துவேயல்லாது வேறொருவர் இல்லை.

சமாதானம் என்ற சொல்லின்முன் வேதாகமத்தில் பல்வேறு அடைமொழிகளைக் காணலாம். அவை: எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம், நதியைப்போன்ற சமாதானம், பூரண சமாதானம் என்பனவாகும்.

இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து நம்மை வாங்கியுள்ளதால், மிகுந்த கரிசனையோடு நமக்குப் பாவமன்னிப்பு ஈந்தும் சமாதானம் அளித்தும் நம்மைப் பராமரித்துவருகிறார்.

தேவனின் கட்டளை

"... ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்" (1 கொரிந்தியர் 6:20).

"தேவனை மகிமைப்படுத்துங்கள்" என்பது அவரது கட்டளையாகும்.

"... மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" (பிலிப்பியர் 1:20).

இது பவுல் அப்போஸ்தலனின் விருப்பம். இது நமது விருப்பமாகவும் இருத்தல் அவசியம். தம்மை மகிமைப்படுத்தும்படியாக, தேவன் நமக்கு ஒரு சரீரத்தைப் பரிசுப் பொருளாகத் தந்துள்ளார். மட்டுமன்றி, இதன்வாயிலாக நாம் தேவனை மகிமைப் படுத்தும்படியாக அவர் நமக்குக் கிருபையையும் தருகிறார்.

"பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன" (அப்போஸ்தலர் 19:11,12).

மேற்காணும் வசனத்தில் அற்புதங்களைக் காண்கிறோம். வியாதியஸ்தர் மேலும் பொல்லாத ஆவியால் பிடிபட்டோர்மேலும் பவுலின் உறுமால்கள், கச்சைகள் பட்டவுடன் வியாதிகள் நீங்கின; பொல்லாத ஆவிகள் பறந்தோடின. பவுலின் சரீரத்தில் காணப்பட்ட வஸ்திரம் எத்துணை அற்புதங்களைச் செய்தது! இங்கு அவனுடைய சரீரத்தால் தேவன் மகிமைப்படுத்தப்பட்டாரன்றோ? ஆம், நாமும் நமது சரீரத்தின் அங்கங்களாலும், வஸ்திரங்களாலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். அவை, தேவநாம மகிமைக்கென்று செலவு பண்ணப்படவும்வேண்டும்.

நமது நாவு, கை, கால்கள்மட்டுமல்ல நமது செயல்கள் ஒவ்வொன்றினா தேவநாமம் மகிமைப்பட, நாம் பிரயாசப் வேண்டும்.

"என்னைப்பற்றி தேவனை மகிமை படுத்தினார்கள்" (கலாத்தியர் 1:24).

இங்குப் பவுல் அப்போஸ்தல தேவனை மகிமைப்படுத்தும்படியாய்த் தன அளிக்கப்பட்ட கிருபையைப்பற்றி விளக்குகிற கலாத்தியர் முதலாம் அதிகாரம் 15 முதல் வரையுள்ள வசனங்களை வாசித்தறிவீர்களா

தேவன் தமது கிருபையால், தன்னை பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினா தம்முடைய குமாரனை வெளிப்படுத்தின என்றும், தேவனுடைய வெளிப்படுத்தலை பெற, அவர் அரபி தேசத்திற்குச் சென்று மூன் வருடங்கள் தனித்திருக்கக் கிருபைசெய்த என்றும், மூன்று ஆண்டுகட்குப் பின்ன பேதுருவைச் சந்தித்து, அவரோடு ஐக்கிய கொள்ளச் செய்தாரென்றும் பவுல் அப்போஸ்தல கூறியுள்ளது காண்க. ஆம், தேவ கட்டளை களை நிறைவேற்ற, தேவன் நமக்குக் கிருபை தருகிறார்.

அன்பானவர்களே! "நீர் எனக்கு கொடுத்துள்ள எனது சரீரத்திற்காக உமக் ஸ்தோத்திரம்," என்றுகூறுங்கள். "நான் தவறா காரியங்களுக்கு என் சரீரத்தைப் பய படுத்தாமல், எவ்விதத்திலும் என்னை அசுத்த படுத்தாமல், உம்மை மகிமைப்படுத்த, என் சரீரத்தை உமக்கு அர்ப்பணிக்கிறேன்; என் சரீ உமது ஆலயம் என்பதை உணர்ந்து செய படுவேன்" என்று வாக்களியுங்கள்.

கர்த்தர்தாமே உங்களுக்கு வேண்டி கிருபைகளைத் தந்தருளுவாராக.

உள்ளும் புறமும் தூய்மையாயிருக்கவேண்டுமென்பதே
என் ஜெபமும் தீரா வாஞ்சையுமாகும்;
ஓ, என்னிலுள்ள உலக அழுக்குக் கழுவப்பெற்று,
சுயம் மற்றும் பாவத்தினின்று விடுதலையாகி
இயேசுவைப் போலிருக்க நான் வாஞ்சிக்கிறேன்.

The wonderful words of Jesus

Pastor M.K. Sam Sundaram

In Mark 10:17-23 we read about an incident in which a rich youngman approached Jesus humbly with the question, what he should do to inherit eternal life. It was a good question, coming as it did from a youngman who was rich. Jesus mentioned the important commandments he should follow and the youth said he had been following them from his youth on. Perceiving him to be rich with his heart entrenched in his riches, Jesus said, *"One thing thou lackest: go thy way, sell whatsoever thou hast, and give to the poor, and thou shalt have treasure in heaven: and come, take up the cross, and follow me"* (Mark 10:21). At these words the youngman was grieved and he left the presence of Jesus a sad man. Then Jesus remarked twice how it was very difficult for rich people to enter the kingdom of God. The disciples were astonished at His words.

On another occasion also people wondered at the words of Jesus and that was when He was in the synagogue at Nazareth on a Sabbath day. He took the scroll, read out verses from the prophecy of Isaiah (Is.61:1,2), and said, *"This day is the scripture fulfilled in your ears"* (Luke 4:21). The people at the synagogue were astonished at the words of grace which proceeded from his mouth.

Why did people who listened to the words of Jesus wonder at them? They wondered because they were the words spoken by the Son of God. His words are always full of grace and truth, and they are eternal. Jesus said, *"Heaven and earth shall pass away, but my words shall not pass away"* (Matthew 24:35).

Jesus Himself is the Word as we read in John 1:1—*"In the beginning was the Word, and the Word was with God, and the Word was God."* Though Jesus is known as the Word, there is a distinction between His being the Word and the words He spoke when He was on the earth.

Apostle John goes on to say in verse 14, *"And the Word was made flesh, and dwelt among us, (and we beheld his glory, the glory as the only begotten of the Father,) full of grace and truth."* From this we understand that Jesus the Word was manifested in the flesh and dwelt among mankind. As the Son of man He spoke such words of heavenly wisdom and authority that those who heard Him could not but be amazed.

On different occasions and in certain situations Jesus spoke words which could be classified into different categories according to the effect they had on the one to whom He spoke it. Let me elucidate each one setting it in its context.

1. Healing words

"The centurion answered and said, Lord, I am not worthy that thou shouldest come under my roof: but speak the word only, and my servant shall be healed" (Matthew 8:8).

Here we see a centurion (an army officer in ancient Rome) approaching Jesus for curing his servant who was suffering from paralysis. When Jesus offered to go with him to his home and cure his servant, the centurion humbled himself and said that he was not worthy that Jesus should enter his house, and requested Him to speak only the word so that his servant would be healed. He added that though he was under authority, he had people under him who would obey his orders. What he meant was, if he an earthly officer had power to order his subordinates and control them, how much more powerful the word of Jesus would be!

It is noteworthy that a Gentile knew the power of Jesus' spoken words and had much faith that they would heal his servant. He implored Jesus only to speak the word replete with power and healing potential and do a miracle. Appreciating the centurion's faith, Jesus said to him, *"Go thy way; as thou hast believed, so be it done unto thee"* (Matthew 8:13). The centurion's servant recovered the very same moment.

On another occasion also Jesus spoke healing words. In John 4:47 we read about a noble man whose son was critically ill and at the point of death. He requested Jesus to go with him to his home and heal him before he died. Jesus said to him, *"Go thy way; thy son liveth"* (v.50). The man believed in the power of Jesus' words and went home to find his son completely recovered from his illness. He checked with his servants and was told that he recovered exactly at the hour Jesus spoke the words *"... thy son liveth."*

Some years ago, an old lady, suffering from acute stomach ache, came to me for prayer. I laid my hand on her and prayed. The next Sunday she came and gave me something which I thought was a coin. I asked her why she gave it to me. She replied that there was a tumour in her stomach which the doctor said should be removed by surgery. The surgery was fixed for the week following the day she came to me for prayer. After prayer she went to the doctor, but on examination the doctors found no tumour there. A miracle had happened because Jesus spoke healing words. While the first scan showed a tumour, the second one revealed none.

The object which I mistook for a coin was really a gold ring! I asked her why she gave me a gold ring, and she said she had no money to offer the Lord, and hence, she brought her gold ring as her offering to the Lord for the miraculous cure she had received from Him.

Jesus is alive even today. His words have not lost their efficacy. You may depend on Him to do a miracle in your life if you have the faith that Jesus found in the centurion (Matt.8:10&13).

2. Delivering words

"And they were all amazed, and spake among themselves, saying, What a word is this! for with authority and power he commandeth the unclean spirits, and they come out" (Luke 4:36).

Jesus came down to Capernaum in Galilee and taught in a synagogue on the Sabbath. People were amazed at the authority with which He spoke.

There in the synagogue was a man with a demon (an unclean spirit). *The man shrieked loudly and said, "... What have you to do with us, Jesus of Nazareth? Have you come to destroy us? I know Who You are—the Holy One of God"* (Amplified Bible-Luke 4:34)!

Jesus rebuked him and said, *"Hold thy peace, and come out of him."* At once the demon left him and the people were astonished at the powerful words which delivered the man from the clutches of the demon.

Dear child of God, you may be a slave to some bad habits. You may be unable to be free from them. But, if you wish to be delivered from any of the habits you are addicted to, ask Jesus to deliver you from them. If you go to Him with a sincere desire in your heart, He will speak the delivering words and set you free. If the Son of God makes you free, you will be free indeed (John 8:36).

3. Helpful words

"And Simon answering said unto him, Master, we have toiled all the night, and have taken nothing: nevertheless at thy word I will let down the net" (Luke 5:5).

Before becoming a disciple of Jesus, Simon Peter was a fisherman by profession. One night Peter and his companions went out fishing in the sea, and though they toiled all night, they did not catch even a single fish. Jesus knew their failure and the consequent disappointment. He told Peter to launch out into the deep and let down his nets for a catch (Luke 5:4).

Simon who had been fishing in the sea as an experienced fisherman for many years, told Jesus that he and the other fishermen had worked hard all night and caught nothing; nevertheless, at His word he would let down his fishing net. The result of Peter and others obeying Jesus' helpful word was such that they had a huge catch of fish and their nets almost gave way.

Dear reader, if you are unsuccessful in your attempt to do something useful for your livelihood, go to Jesus. He will help you. Even after repeated failures you will be successful if Jesus speaks His helpful words.

4. The melting word

"And he left them, and went away again, and prayed the third time, saying the same words" (Matthew 26:44).

Unlike the words Jesus spoke on other occasions, in the present situation His words were not full of authority. On the other hand, they were spoken by the 'Man of Sorrows' because He knew He was going to lay

down His life as a propitiation for the sin of humanity.

As He went to the Garden of Gethsemane with His disciples, He took Peter, John and James and told them to wait with Him in prayer. He was overwhelmed with great sorrow and anguish and He said to the three disciples, *"My soul is exceedingly sorrowful, even unto death..."* (v.38). He prayed to His heavenly Father three times to take away the bitter cup He was to drink from. Nevertheless, He submitted Himself to the will of His Father and prayed. The prayer reflected the trauma He was going through as the sin-bearer and it would have melted any base, stony-hearted person.

The prayer of Jesus teaches us a lesson. Normally, we pray a casual prayer and expect God to answer it. But, in a dire situation you should pray as Jesus did—pouring out words of agony from your heart which will melt the heart of God. He cannot but answer such a prayer.

Jesus prayed in great anguish and it moved the Father's heart. God sent an angel and strengthened Him (Luke 22:43). If you pray as Jesus did, God the Father will send an angel and strengthen your spirit, too.

5. Convicting words

Jesus told His disciples how He would be deserted by all of them at the most critical time when He would be arrested and led away to be tried. But, Peter assured Jesus that even if others left Him, he would be with Him through thick and thin. Foreseeing how Peter was going to deny Him, Jesus told him that before the cock crew, he would deny Him three times (Luke 22:34).

Just as Jesus had prophesied, Peter denied Him three times, and when the cock crew twice, Peter remembered Jesus' words and wept bitterly (Luke 22:62).

"Pride goes before a fall" is a saying which came true in Peter's case. He exalted himself above all others and said he would be with Jesus even if others left Him. But he could not admit his being Jesus' disciple when he was identified as one by a maid servant, another woman and some bystanders and to all of them he said he did not know Him. What was more, his denial was followed by curses and an oath.

If only Peter had humbled himself and asked Jesus to give him the grace to stand by Him, he would have received abundant grace which would have given him the courage to admit that he was Jesus' disciple. However, Peter's remorse which made him shed bitter tears prompted Jesus to elevate him to apostleship. He said to him, *"Feed My lambs"* once and *"Feed My sheep"* twice.

The love of Jesus not only convicts His wayward children but also consoles them when they are filled with remorse for grieving Him.

6. Hopeful words

"And they remembered his words" (Luke 24:8),

Jesus had many followers among whom were women who followed Him faithfully.

On the first day of the week some of them went to the tomb to anoint the dead body of Jesus. The angels who were by their side asked them why they had come looking for the living among the dead, and added that Jesus was not there but was risen. They informed the women that Jesus was going to Galilee before them.

The women shared the good news with the disciples, but they did not believe their words because they had forgotten the words of Jesus about His resurrection. They lost all hope of seeing Jesus alive again, and with Peter taking the lead, they went back to their old profession of fishing. But, the personal appearance of Jesus to them confirmed the words of the women.

The Bible contains many statements of hope for believers that they will see the resurrected Saviour face to face when He appears in midair.

Are you ready to meet Him when He comes?

7. Blessed **words**

"I have shewed you all things, how that so labouring ye ought to support the weak, and to remember the words of the Lord Jesus, how he said, It is more blessed to give than to receive" (Acts 20:35).

Here Apostle Paul speaks about Jesus saying that it is more blessed to give than to receive with particular reference to supporting the weak. There is no biblical reference to Jesus actually speaking those words, but Paul attributes this aphorism to Him. However, there are other contexts in which Jesus talks about giving. For instance, in Matthew 5:40 He says, *"... if any man sue thee at the law and take away thy coat, let him have thy cloak also."* We see Jesus exhorting the rich young man to sell all his riches and give it to the poor. In beautiful words He said, *"... freely ye have received, freely give"* (Matt.10:8), thus highlighting the value of giving especially what you have received at no cost.

In the Old Testament there are many references to charity—helping the poor. In Proverbs 3:27 the wiseman says, *"Withhold not good from them to whom it is due, when it is in the power of thine hand to do it."*

Do not turn away a beggar who seeks alms from you and say, "Come tomorrow" when you have the means to help him today. Store your treasures in heaven by giving to the poor, for it is more blessed to give than to receive.

May the wonderful words of Jesus inspire you to speak words of faith which would have the desired effect on the listeners.

Cling to the Bible; this jewel and treasure
Brings life eternal and saves fallen man;
Surely its value no mortal can measure;
Seek for its blessing, O soul, while you can.
-Anon

விசுவாச அப்போஸ்தலன்

தொடர் பகுதி

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

இயேசுவின் நாமத்தினாலே நட

மற்றுமொரு சம்பவம். இதை அவர் வாய்மொழியாகவே கேட்போம். "நானும் அந்த நண்பரும் படுக்கையருகில் இருந்தோம். 'ஐயையோ, அவள் பிணமாக அல்லவா கிடக்கிறாள்'—பயத்தால் கூவினார் எனது நண்பர். இப்படியொரு பயந்த முகத்தை நான் இதுவரை கண்டதேயில்லை. 'நான் என்ன செய்வேன்?' மீண்டும் அவரது பயந்தகுரல். யாருக்கும் விளங்காத ஒரு செயலை அப்போதுதான் செய்தேன். அந்தப் பிணத்தை அப்படியே தூக்கினேன், சுவர்வரை தூக்கிச் சென்று, அந்தச் சுவரின்மீது சாத்திவைத்தேன்; விழுந்துவிடாதவாறு அப்படியே பிடித்துக் கொண்டேன். அவள் முகத்தைப் பார்த்தவாறே, 'இயேசுவின் நாமத்தினாலே, மரணமே உன்னைக் கடிந்துகொள்கிறேன்' என்றேன். அவளது உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை முழு சரீரமும் நடுங்க ஆரம்பித்தது. 'இயேசுவின் நாமத்தினாலே நட' என்று கட்டளையிட்டேன். மீண்டும் கூறினேன். 'இயேசுவின் நாமத்தினோலே, இயேசுவின் நாமத்தினாலே, நட!' அவள் நடந்தாள்."

தாமதமா, ஒருபோதும் இல்லை

மீண்டும் ஓர் சம்பவம். இது எலியாவையும், எலிசாவையும் போல விக்கிள்ஸ்வொர்த் மரித்த ஒரு சிறுவனை எழுப்பிய நிகழ்ச்சி. ஒரு சிறுவன் இறுதிக் கட்டத்தில் இருக்கிறான் என்ற செய்தியோடு அவர் அந்த வீட்டிற்கு அழைக்கப் பட்டிருந்தார். ஓடோடிச் சென்றார் விக்கிள்ஸ்வொர்த். ஆனால், அவர் வீட்டினுள் நுழைய முற்படும் போதே, அந்தச் சிறுவனது தாயார் அவரை, "நீங்கள் மிகவும் தாமதமாக வந்துவிட்டீர்கள். இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை" என்ற வார்த்தைகளோடு வரவேற்றாள். "தேவன் என் எங்குமே மிகவும் தாமதமாக அனுப்பிய யில்லை" என்று பதிலளித்தார் விக்கிள்ஸ்வொ உண்மையில் அந்தச் சிறுவனது நி அவ்வளவு மோசமாகத்தான் இருந்தது.

அவனை ஓர் அடி நகர்த்தினா அவனது இதயம் நின்றுவிடும். அவன் மரித்து போவான். இதுதான் இறுதிக்கட்டம். அ முழுக் குடும்பமும் நம்பிக்கையிழந்து கா பட்டது. தானாகவே நம்புவதற்கும் அந்த சிறுவனிடம் பெலன் இல்லை. இதற்குள் த ஒரு கல்யாண நிச்சயத்தார்த்தத்துக்காக ஒ ஆலயத்தில் இருக்கவேண்டிய நேரமாயிற் இது என்பது அவருக்கு நினைவுக்கு வந்த "தேவன் இவனை எழுப்பப்போகிறார். இவ புத்தாடைகளையெல்லாம் எடுத்துத் தயார் வையுங்கள். அதற்குள் நான் ஆலயம் சென் திரும்பிவிடுகிறேன்" என்று கூறி ஆலயத்துக்கு புறப்பட்டார் விக்கிள்ஸ்வொர்த்.

அவர் திரும்பி வந்தபோது, அ சொன்னபடி அவர்கள் எதையுமே செய் வைத்திருக்கவில்லை. அத்தனை அவிசுவா அவர்களுக்கு. ஆனால், இவருடை விசுவாசத்தைக் கண்டு சங்கடப்பட்ட அவர்க உடனே புத்தாடைகளை எடுத்துத் தயார் வைத்தார்கள். "இப்பொழுது காலில் சாக் (SOCKS) மட்டும் அணிவியுங்கள், போது என்று சொன்னார் விக்கிள்ஸ்வொர்த். பின் எலிசாவைப் போலவே, அனைவரை வெளியே அனுப்பிவிட்டு, கதவைப் பூட்டி கொண்டார். உள்ளே அவரும் அந்த சிறுவனின் உடலும்தான்.

அந்தச் சடலத்தைப் பார்த்துப் பேச தொடங்கினார் விக்கிள்ஸ்வொர்த், "இதுவ

றும்கூட அனுபவித்திராத ஏதோ ஒரு த்தியாசமான காரியம் இப்போது நடக்கப் போகிறது. நான் உன்மீது என் கைகளை வைக்கும்போது, நான் தாங்கிக் கொள்ளமுடியாத அளவு தேவனுடைய மகிமை இந்த இடத்தை ரப்பப்போகிறது. நான் அதைத் தாங்கக் கூடாதபடி அது அவ்வளவு பெரிய மகிமையா ருக்கும்!" இதைச் சொன்ன அவர், அந்தச் லத்தைத் தொட்டதுதான் தாமதம், தேவ வல்லமை அந்த அறையை நிரப்பியது. மகத்தான வல்லமை தாங்காது விக்கிள்ஸ்வொர்த் தரையில் விழுந்தார். "தேவனே, இது ம்முடைய மகிமைக்காக!" என்றார். உடனே அந்தச் சிறுவனும் கூக்குரலிடத் தொடங் னான். பிறகு அவன் எழுந்தான். தன் புத்தாடை களை அணிந்துகொண்டான். இன்னும் தரையில்தான் கிடந்தார் விக்கிள்ஸ்வொர்த். தவைத் திறந்த அந்தச் சிறுவன், "அப்பா, நான் சுகமானேன். தேவன் என்னைச் சுகப்படுத்தி விட்டார்" என்று கூச்சலிட்டான்.

இப்போது அந்த வீட்டையே தேவ மகிமை நிரப்பியது. அந்தத் தகப்பனும் தாயுங்கூட மகிமை தாங்காமல் கீழே விழுந் தார்கள். அந்தச் சிறுவனின் சகோதரி ஒருத்தி, மனநல மருத்துவமனையிலிருந்து சில நாட்கள் முன்புதான் வீடு திரும்பியிருந்தாள். அவளும் உடனடியாக பூரணமான மனநலம்பெற்றாள். அந்த ஊர் முழுவதும் இந்தச் செய்தி பரவியது. மக்கள் தொடப்பட்டனர். அந்த ஊரிலே பெரும் எழுப்புதல் தொடங்கிற்று.

தேடிச்சென்று கொடுத்த சுகம்

அழைக்கப்படாமல் தானாகவே முன்சென்று தெய்வீக சுகத்தைப் பெற்றுத்தந்த அனுபவமும் உண்டு இவரது சரித்திரத்தில்.

ஆஸ்திரேலியாவிலே, சிட்னி நகருக்கு அவர் ஊழியத்தின் நிமித்தமாகச் சென்றிருந்த நேரம் அது. அவரும் அவரது நண்பரும் ஏதோ வாங்குவதற்காகத் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலைவிட்டு வெளியே வந்திருந் தார்கள். தெருவில் நின்றிருந்த அவர்களைத் தாண்டி, ஒரு மனிதன் ஊன்றுகோல்களோடு தத்தித் தத்தி நடந்துசென்றான். ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும், அவன் நெளிந்து நெளிந்து கஷ்டப்பட்டான். அவன் முகத்தில் அகோர வேதனை. இது அவரது ஆத்துமா விற்குள் பாய்ந்தது.

"இந்த மனிதனை இப்படியே விட்டு விட்டு இவனைக் கடந்து செல்வது சரியா?" என்று அவரது மனம் கேட்டது.

நண்பரிடம் சொன்னார், "கொடிய துன்பத்தில் இருக்கிறான் இந்த மனிதன். இவனை இப்படியே விட்டுவிட்டுச் செல்ல என் மனம் இடங்கொடுக்கவில்லை. நான் அவனோடு பேசவேண்டும்."

அந்த மனிதனை நோக்கிச்சென்ற அவர், "மிகவும் துன்பப்படுகிறீர்களே!" என்றார்.

"ஆம், நான் நலமாக இல்லை, நலமாக வாய்ப்பே இல்லை" அந்த மனிதன் மனமொடிந்த வனாய்ப் பதிலளித்தான்.

"அதோ, அந்த ஹோட்டல் தெரிகிறதே, அந்த ஹோட்டலின் வாசலில் போய்க் காத்திருங்கள். ஐந்து நிமிடத்தில் நான் வந்து விடுகிறேன். நான் வந்து உங்களுக்காக ஜெபிப்பேன். நீங்கள் மற்ற எவரையும் போல நிமிர்ந்து நடப்பீர்கள்" என்று தாம் தங்கியிருந்த ஹோட்டலைச் சுட்டிக் காட்டியவாறே சொன்னார் விக்கிள்ஸ்வொர்த்.

கடையில் பணத்தைச் செலுத்திவிட்டு ஹோட்டலை நோக்கி நடந்தார் விக்கிள்ஸ்வொர்த். அந்த மனிதன் சொன்ன இடத்தில் நின்று கொண்டிருந்தான். "யாரோ ஒரு முன்பின் தெரியாத மனுஷன் நடுத்தெருவில் என்னைப் பார்த்து, 'உன்னை நிமிர்த்துகிறேன்' என்று சொல்லிவிட்டாரே. எனக்கு என்ன ஆகப் போகிறதோ" என்று குழம்பியவாறே அந்த மனுஷன் அங்கு நின்று கொண்டிருந்தான். ஆனால் விக்கிள்ஸ்வொர்த் சொன்னால் சொன்னது தான். அவர் எதையாவது சொல்லிவிட்டால், தேவன் அதைச் செய்யும்வரை விடமாட்டார்.

தன்னால் செய்யமுடியாததை, வெறும் பேச்சுக்காக அவர் சொன்னதேயில்லை.

நண்பருடன் சேர்ந்து அந்த மனிதனைப் படிக்கட்டுகளில் ஏற்றினார். பின்னர் லிஃப்ட் (LIFT) வரை அவனைத் தாங்கியவாறே நடத்திச் சென்றனர் அவர்கள். அவர்கள் தங்கி யிருந்த தளத்துக்குச் சென்றதும் லிஃப்டிலிருந்து அவனை வெளியே கொண்டுவர வெகுபாடு பட்டனர் இருவரும். அவனைப் பறித்துக் கொண்டு போய்விட, சாத்தான் தன் கடைசி முயற்சியை எடுப்பது போலிருந்தது அப்போது. கடும் முயற்சியோடு அவர்கள் தங்கியிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றனர். அ... ஐந்தாவது நிமிஷத்தில் அந்த மனிதன் '... பார்வையுடனும், நிமிர்ந்த நல்ல ... யுடனும்' வெளியே போனான்.

"வல்லமையின் ஊழியம், வல்லமை... செயல்பாடு, வல்லமையின் வெளிப்... இவை மூன்றுமே பரிசுத்த ஆவியான... அபிஷேகத்தால் கிடைக்கும் முக்கியபல... இந்த மூன்றையுமே தேவன் நம்மூல... நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்ப... நாம் கவனமாயிருக்க வேண்டும்." ... அற்புதத்துக்குபின் அவர் கூறியது இதுவே.

(தொடரு...

தேவனிடம் கிட்டிச் சேர்தலாகிய பெறலரும் பேறு

"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபேசியர் 2:13).

கிறிஸ்து இயேசுவை அறியாத நம்முடைய முன்னாட்களில் அவரைச் சேராதவர்களும், இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர் களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை களுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர் களும், தேவனற்றவர்களுமாய் இவ்வுலகில் நாம் இருந்தோம். இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே தேவனை அண்டிக்கொள்ளுதற்கும், அவருடைய சமுகத்தில் அவரை நெருங்கிச் சேர்ந்து கொள்ளுதற்குமாகிய பெறலரும் பேற்றினைப் பெற்றுள்ளோம்.

தேவ சமுகமும், அவரை நெருங்கிச் சேர்ந்துகொள்ளுதலுமாகிய அநுபவம் பெறுதற் கரிய பெரும் பேறாகும். நாம் அவரிட... நெருங்கிச் சேர்ந்துகொள்ளவேண்டும். இது... மணவாட்டியின் பேரவா. *"என்னை இழு... கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்..."* (உன்னதப்பாட்டு 1:4) என்று சொல்லுகின்... மணவாட்டி. இதுவே சங்கீதக்காரனு... வாஞ்சையுமாயிருந்தது. *"எனக்கோ, தேவ... அண்டிக்கொண்டிருப்பதே நலம்;..."* (சங்கீ... 73:28) என்று சொல்லுகின்றார்.

தம்முடைய சிலுவையின் மரணத்... குறிப்பிடுமிடத்து நம்முடைய கர்த்தா... இயேசு கிறிஸ்துவும் இதனைக் குறித்... பேசியுள்ளார். *"நான் பூமியிலிருந்து உயர்த்... பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்... இழுத்துக்கொள்ளுவேன்..."* (யோவான் 12:3...) என்று சொல்லுகின்றார். இது இயேசுவி... சிலுவை மரணத்தையும், அங்கே சிந்தப்ப... அவருடைய பரிசுத்தமான இரத்தத்தை... குறிப்பிடுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் இரத்... நம்முடைய சகல பாவங்களையும் நீ...

நம்மைச் சுத்திகரிக்கின்றது (1 யோவான் 1:7). இவ்வாறு நாம் அவருடைய பரிசுத்தமான இரத்தத்தினாலே கழுவப்படும்போது, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு மணித்துளிவேளையும் அவரை நெருங்கிச் சேர்ந்துகொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றோம். திறந்த வெளிரங்கமான முறையில் நாம் பாவஅறிக்கை செய்யும்போது அவர் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து, நம்முடைய எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். இவ்வாறு நாம் தேவனோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் ஐக்கியம் பாராட்டுகின்றோம்.

இங்கே அவரோடேகூட இருக்கின்றவர்களாய் ஐக்கியம் பாராட்டுகிறவர்கள் எவர்களோ, அவர்களே மறுமையிலும் அவரோடேகூட இருப்பார்கள். மறுமையில் கிறிஸ்து இயேசுவோடேகூட இருப்பவர்கள் யார்? வெளிப்படுத்தல் 17:14 வசனம் பார்க்க. *"இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக் குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்."*

இம்மையில் இங்கே நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடேகூட எவ்வளவு நெருக்கமாகவும் ஐக்கியமாயுமிருக்கின்றோமோ, அவ்வளவு நெருக்கமாய் அவருடைய மணவாட்டியாய்ப் பரலோகத்தில் நித்திய நித்தியமாக வாழ்வோம் என்பது உறுதி.

தேவனுக்கு ஆராதனை செய்தல்

"ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துகொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28).

'தேவன் *தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை'* என்னும் சொற்றொடரை நோக்குக. ஆம் இது தேவனுடைய *திருச்சபை! இந்தத் திருச்சபைக்* குரிய பெறலரும் பேறுதான் என்ன? தேவனுக்கு ஆராதனை செய்வதே இத்திருச்சபையார்க்குரிய பெறலரும் பேறு.

ஒட்டுமொத்தமாகத் *திருச்சபை* முழுமைக்காக மட்டுமன்றி அதன் உறுப்பினர்களாகிய நம்மனைவரையும் தனித்தனியாகத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இயேசு மீட்டுக்கொண்டிருக்கின்றார். ஆகையால் நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் துதித்து ஆராதனை செய்வது நம்முடைய கடமையாயிருக்கின்றது. *"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"* (1 கொரிந்தியர் 6:19,20) என்று திருமறை நமக்கு அறிவுறுத்துகின்றது.

கர்த்தர் நம்மை அவருடைய திருச்சபைக்குள் எவ்வாறு கொண்டுவந்தார்? கர்த்தர்தாமே இவ்வினாவிற்கு விடையளிக்கின்றார் கேளுங்கள். *"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டுபேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டுவந்து, உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்"* (எரேமியா 3:14,15).

இதுதான் அவருடைய திருச்சபை. இங்கேயே நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும். *"ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்;..."* (சங்கீதம் 50:23) என்று தேவன் சொல்லுகிறார். ஆகையால் ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி நாம் தேவனை அவருடைய திருச்சபையில் ஆராதனை செய்யவேண்டும்.

சிலுவையில் சிந்திய கிறிஸ்து இயேசுவின் இரத்தம் இல்லாவிட்டால், விலைக் கிரயமாகக் கொள்ளப்பட்ட திருச்சபையு மில்லை. அங்கே தேவனுக்கு ஆராதனையு மில்லை.

இம்மட்டுமன்று, நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்டு இரட்சிக்கப்பட்டிருக்கின்றவர்களாகிய நாமும் நம்முடைய இரட்சிப்பின் அனுபவத்தை இந்த இரட்சிப்பினை அறியாத ஏனைய மக்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும். இது நம்மீது சுமத்தப்பட்டுள்ள கடமையாயிருக் கின்றது. இதனைக்குறித்து நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, *"பிதாவினிடத்தி லிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற வரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவரு மாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப் பீர்கள்"* (யோவான் 15:26,27) என்று சொல்லுகிறார்.

விசுவாசிகளாக நாம் தேவனுடைய திருச்சபைக்குள் வரும்போது, நாம் அவருடைய திருவிருந்தில் பங்குபெறுகின்றோம். தேவ னுடைய திருவிருந்து ஆராதனையானது கிறிஸ்து இயேசுவின் இரத்தத்து...ஓடு நம்முடைய ஐக்கியத்தைச் சுட்டிக்காண்பிக்... அவருடைய பந்தியில் பங்குபெறுகின்ற ந... நம்மை நாமே ஆராய்ந்து எல்லாத் த... யோடும் பங்கு பெறவேண்டுமென்று நம... அறிவுறுத்துகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்... பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்... ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்... அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்... மாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்... நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியா... அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமு... யிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16,17).

"இப்படியிருக்க, எவன் அபாத்திரமா... கர்த்தருடைய அப்பத்தைப் புசித்... அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணு... கிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தை... இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவ... யிருப்பான். (ஆகையால்) எந்த மனுஷனு... தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்... அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தி... பானம்பண்ணக்கடவன்" (1 கொரிந்தி... 11:27,28).

ஆகவே நம்முடைய தகுதியுடைமை... கல்வாரிச் சிலுவையில் சிந்திய கிறிஸ்து... இயேசுவின் திரு இரத்தத்தினால் உண்டாயிரு... கின்றது என்பதையும், அத்தகுதியுடைமை... நம்மை அவருடைய வருகையின்போது... அவரோடேகூட பரத்தில் கொண்டுசேர்க்க... வல்லதாயிருக்கின்றது என்பதையும் நினை... கூர்ந்து, இவ்வுலகில் இப்பொழுது நா... வாழ்வாங்கு வாழவேண்டும். (தொடரும்)

நான் இயேசுவில் காணும் சமாதானம்,
பூமியில் ஒரு வல்லமையும் அசைக்கக்கூடாத சமாதானம்,
கர்த்தரை விலையேறப்பெற்றவராக்கும் சமாதானம்,
ஒருவரும் என்னிடத்திலிருந்து எடுக்கக்கூடாத சமாதானம்.

பெண்கள் பகுதி

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

அழப்போகும் சிறுகுழந்தையின் முகம் போல என் அக்காளின் முகம் மாறிற்று. "உன்னுடைய ஜெபங்கள் எனக்கு ரொம்பத் தேவை, குல்ஷான். அலிம் ஷா தன்வீட்டில் நீ பிரவேசிக்க அனுமதி மறுத்துவிட்டால் நான் ஒரு பங்களாவை வாடகைக்கு அமர்த்திக் கொள்வேன். நான் உன்னை எப்படியாவது என்னுடன் கூட்டிச்செல்லுவேன்" என்று பிடிவாதமாக உரைத்தாள் அனீஸ்.

"உனது கணவர் கோபமடைந்து உன்னை விவாகரத்து செய்துவிடுவார் என்றே நினைக்கிறேன்" என்று கூறினேன்.

ஆயினும் இறுதியில் அவளோடு செல்ல ஒத்துக்கொண்டேன். அண்ணன் அலிம் ஷா எனது வரவை எப்படி ஏற்றுக் கொள்வார் என்பதைப் பார்க்கவிரும்பினேன்.

நவம்பர்த் திங்கள் 28ம் தேதி மாலை நான்கு மணிக்கு நாங்கள் காரில் புறப்பட்டோம். வீட்டுச்சாமான்கள் ஒரு லாரியில் சென்றன.

எனது அண்ணன் அலிம் ஷா எங்களை வரவேற்றுப் பேசிய வார்த்தைகளைக் கேட்டு என்னால் நம்பமுடியவில்லை. "உங்கள் யாவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் யாவரையும் பெருமகிழ்ச்சியுடன் என் வீட்டிற்கு வரவேற்கிறேன்" என்று மகிழ்ச்சியோடு பேசினார்.

என்ன ஆச்சரியம்! அண்ணன் அலிம் ஷா என்னோடு தொலைபேசியில் அவ்வளவு கடுகடுப்போடு பேசியது உண்மையா, இல்லையா? தனிவீடு காணும்வரை நாங்கள் எல்லாரும் தற்காலிகமாக அலிம் ஷா வீட்டிலேயே குடியேறினோம். எனக்கு நேர்த்தியான ஒருபடுக்கையறையும் உதவிசெய்ய ஒரு வேலைப்பெண்ணும் கொடுத்தனர்.

நான் எதிர்பாராதவிதமாக அண்ணன் அலிம் ஷா என்னைப்பார்த்து, "உனக்கு இங்கு நண்பர்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும், நீ எங்குச் செல்லவேண்டுமானாலும் என் காரில் உன்னை எடுத்துச்செல்லும்படியாக என் கார் ஓட்டுநருக்குச் சொல்லியிருக்கிறேன்" என்றார்.

நான் பெருமகிழ்ச்சியோடு அண்ணனுக்கு நன்றி கூறினேன். எனினும், என் உள்ளத்தின் ஆழத்தில் இக்காரியம் உண்மையாக இருக்கக் கூடுமா என்கிற சந்தேகம் எழுந்து, என் அமைதியைக் குலைத்தது.

ஞாயிற்றுக்கிழமை வாரிஸ் ரோடு மெத்தடிஸ்ட் ஆலயத்திற்கு என்னைக்கொண்டு செல்லுமாறு கார் ஓட்டுநரிடம் சொன்னேன்.

போதகர் ஆலய வாசலில் என்னோடு கைகுலுக்கினார். அங்குள்ள மக்கள் என்னை இனிமையாக வரவேற்றனர். ஆனால் அவர்களில் ஒருவர்கூட, "நீ எப்படியிருக்கிறாய்? இவ்வளவு காலமும் எங்குச் சென்றிருந்தாய்? உனக்கு ஏதாவது தேவையா?" என்று என்னிடம் கேட்கவில்லை. ஆகவே, நான் என்னுடைய கஷ்டங்களைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. தேவன்தாமே அவையெல்லாவற்றையும் தீர்த்துவைப்பார் என்று நம்பினேன்.

நான்கு மாதங்கள் கழிந்தன. மே மாதம் ஒரு மாலைப்பொழுதில் நான் என் அறையில் நாற்காலியில் உட்கார்ந்தவண்ணமாக வேதாகமத்தை மடியில் வைத்துக்கொண்டு ஜெபித்துக்கொண்டிருந்தேன். காலணி கீச்சிடும் சத்தம் கேட்டுக் கண்களைத் திறந்தேன். எனக்கு நேர் எதிரில் அலிம் ஷா உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். ஒரு புலியைப்போல் என்னையே உற்று நோக்கியவராக இருந்தார். தீய

புன்முறுவல் அவர் முகத்தில் ஆடிக்கொண்டிருந்தது.

"நீ என் வீட்டில் சந்தோஷமாக இருக்கிறாயென்று நம்புகிறேன்" என்று என்னால் நம்பமுடியாத மிருதுவான குரலில் பேசினார். "என் மனைவியோடு நன்றாக ஒத்துப்போகிறாய் என்று நம்புகிறேன். என் பிள்ளைகளோடும் மகிழ்ச்சியாயிருக்கிறாய் அல்லவா? எனது வேலைக்காரர்கள் எவரும் உன்னைத் தொந்தரவு செய்கிறதில்லையென்று நினைக்கிறேன்."

"நான் ரொம்ப சந்தோஷமாக இங்கு இருக்கிறேன்" என்று நேர்மையாக எனது உள்ளத்தின் உணர்ச்சிக்கேற்பப் பதிலளித்தேன்.

"நாங்கள் உன்னை அதிகமாக நேசிக்கிறோம், குல்ஷான். உனக்கு நன்மையுண்டாக நீ எங்களோடேயே தங்கவேண்டுமென விரும்புகிறோம். குல்பர்கில் உனக்கென்று ஒரு பங்களா கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

குல்பர்க், லாகூரிலிருந்து ஐந்து அல்லது ஆறு மைல் தொலைவிலுள்ள ஒரு அழகான நவநாகரிகமான குடியிருப்பு. சுமாரான செல்வந்தர்கள் அங்கு வசித்துவந்தனர்.

ஒரு விடுமுறையில் சுற்றுலாவுக்கு நீ என்னோடு வருவாயா? அடுத்த மாதம் நான் மெக்கா, மெதீனா மற்றும் இதர இஸ்லாமிய நாடுகளைச் சந்தித்துவர விரும்புகிறேன். நீயும் என்னோடுவர விரும்புகிறாயா?

அண்ணன் என்னைச் சோதிக்கலானார். எனக்கு ஒரு வசனம் ஞாபகத்திற்கு வந்தது, *"... என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்"* (மத்தேயு 4:9). "உம்மோடு வருவதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் அப்படிச் செய்வதனால் எந்த மாறுதலும் வரப்போவதில்லை" என்றேன்.

அலிம் ஷா என் மடியில் இருந்த வேதபுத்தகத்தை எடுத்து நான் தி... வைத்திருந்த பக்கத்தை வாசித்துச் சிந்... ஆரம்பித்தார். "நான் உனக்குக் கொடு... படியாகத் திட்டமிட்டிருக்கும் எல்லாவற்று... ஈடாக நான் உன்னிடத்தில் எதிர்பா... இப்புத்தகமே. வேதபுத்தகத்தை என்னிட... கொடுத்துவிடு. நான் அதை வேதாகம... நிலையத்திற்கு எடுத்துச் சென்று, நீ மறுபடி... அதைப் படிக்க முடியாதபடி செய்துவிடு... நீ கிறிஸ்தவ ஆலயத்திற்குச் செல்வதை... நிறுத்திவிடு. அப்போது நீ என்ன வே... மென்று கேட்டாலும் அதை ... கொடுப்பேன்" என்றார்.

நான் சங்கீதம் 119:105 ஐச் சத்த... வாசித்தேன், *"உம்முடைய வசனம் ... கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெ... சமுமாயிருக்கிறது."* இது தேவனு... வார்த்தை. சரியானது என்ன, தவறானது என்... என்பதை இதுவே எனக்கு வேறுபடுத்... காண்பிக்கிறது. நான் இதை உமக்குக் கொ... கவேமாட்டேன். இது என் வாழ்க்கையின் ... பகுதியாகும்" என்றேன்.

அண்ணனுடைய கோபம் அதிகரித்... கொண்டேயிருந்தது. நான் சீக்கிரமாக மே... பேசினேன்: "நான் ஆலயத்திற்குச் செல்வ... நிறுத்தமுடியாது. ஏனென்றால், அது தேவனு... வீடு. மணவாட்டி ஆயத்தமாகிக் கொண்டி... கிறாள், மணவாளன் வரப்போகிறார்.

"மனுஷர் முன்பாக என்... மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நா... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்... மறுதலிப்பேன்" (மத்தேயு 10:33) என... வசனம் என் இருதயத்தைப் பலப்படுத்திற்...

அலிம் ஷா வெகுண்டெழுந்... வேதபுத்தகத்தை என்மேல் வீசியெறிந்... "சூரியன் அஸ்தமிக்குமுன்பு என் வீட்... விட்டு வெளியேறு, நான் உன்னை மறுபடி... பார்க்கவே விரும்பவில்லை" என்றார்.

கண்ணி சரியாகவே வைக்கப்பட்...

...யாகவே சுழன்றும் அடித்தது. ஆனாலும் ...ணி காலியாகவே இருந்தது. ஏனெனில் ...லை தப்பிவிட்டது.

அன்றிரவில் வேறு யாரும் என்னண்டை ...வேயில்லை. துக்கமான மனதோடு படுத்துக் ...ண்டேன். மறுநாள் காலையில் காரியங்கள் ...வும் எனக்கு எதிராகவே சம்பவித்தன. என் ...ணி என்னைப்பார்த்து ஒரு வார்த்தைகூட ...சவில்லை. அண்ணனோ கண்களுக்குத் ...படவே இல்லை. அனீசிடமிருந்தோ, ...வள் கணவனிடமிருந்தோ ஒரு செய்தியும் இல்லை. பணிப்பெண் காலை உணவைக் கொண்டு வந்து வைத்துவிட்டு அமைதியாக அப்படியே சென்றுவிட்டாள்.

அனீஸ் எனக்குத் தைத்துக் கொடுத்த ஐந்து சட்டைகளை துக்கத்தோடு பையில் வைத்தேன். அலிம் ஷா எனக்குக் கொடுத் திருந்த நேர்த்தியான ஆடைகளில் ஒன்றையும் நான் எடுக்கவில்லை. ஏனென்றால், "என் வீட்டிலுள்ள எதையும் நீ எடுத்துச் செல்லாதே!" என்று ஏற்கனவே என்னை எச்சரித்திருந்தார். என்னுடைய பெட்டி தாழ்வாரத்தில் இருந்தது. நான் அதை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, திடீரென சப்தர் ஷா என்னை எதிர் கொண்டு வருவதைக்கண்டேன். நான் ஜூங்கை விட்டு வெளியேறிய நாள்முதல் அதுவரை அவரைக் காணவேயில்லை.

அவரைச் சந்தோஷமாக வரவேற்கும் வார்த்தைகள் என் உதடுகளில் தோன்றி மெல்ல மறைந்தன. ஏனெனில் அவரது முகம் மிகக் கொடூரமாகக் காட்சியளித்தது மட்டுமல்லாமல், அவர் கையில் ஒரு துப்பாக்கியும் இருந்தது.

சப்தர் ஷா என் கையின் மணிக்கட்டை இறுகப் பிடித்து, படிக்கட்டுவழியாக என்னை வேகமாக இழுத்து நிலவறைக்குக் கொண்டு வந்தார்.

"இங்கேயே இரு, அசையாதே" என்று அவர் கட்டளையிட்டார்.

நான் கீழ்ப்படிந்தேன். (தொடரும்)

Youth Section

The faithfulness of Ruth

The Book of Ruth derives its name from the principal character. The biographical sketch of this young godly Moabitess contains much information about the customs of the ancient near East and provides its readers with some valuable facts regarding the ancestry of King David. It also demonstrates God's gracious concern for all mankind. The book of Ruth shows how things never get too bad for God to change them. In the dark days of the Judges a ray of sunshine breaks out through this story of love, faithfulness and redemption. There are four scenes in this book. Let me explain those exemplary scenes.

Scene I - The Return

(Ruth chap.1:1) In the days when the judges ruled, a famine broke out in the land. Elimelech of Bethlehem-judah, his wife Naomi and their two sons went to Moab to dwell there. They left the house of bread for an unknown country. Tragedy struck the family. Elimelech died, leaving Naomi a widow. The sons got married to Orpah and Ruth who belonged to Moab. After sometime the sons

died. The three women were abandoned. Naomi urged the daughters-in-law to stay back in Moab. Orpah agreed but Ruth insisted that she would go with her mother-in-law to Bethlehem. In Ruth 1:16 we read Ruth's words, *"Whither thou goest I will go; and where thou lodgest, I will lodge: thy people shall be my people and thy God my God:"*

Scene II - The Reunion

Naomi and Ruth reached Bethlehem. Ruth went gleaning. She started picking the grains on the ground which were the leftovers in the harvest. God led Ruth to pick the corn in the field of a kind landowner Boaz, who was Naomi's relative. Boaz recognised the purity of Ruth and spoke to her favourably. (Ruth 2:11,12): *"It hath fully been shewed me all that thou hast done unto thy mother-in-law since the death of thine husband; and how thou hast left thy father and thy mother, and the land of thy nativity, and art come unto a people which thou knewest not heretofore. The Lord recompense thy work, and a full reward be given thee of the Lord God of Israel, under whose wings thou art come to trust."* The ways in which God works baffle us. But God works always for our welfare.

Scene II - The Request

Naomi told Ruth to visit Boaz. Ruth lay at his feet. Boaz asked her, *"Who art thou? She answered, 'I am Ruth, thine handmaid; spread therefore thy skirt over thine handmaid; for thou art a near kinsman."* It was a symbolic pledge of marriage—that is, Ruth requested Boaz to marry her. Ruth chapter 3:11 mentions, *"And n my daughter, fear not; I will do to thee that thou requirest: for all the city of people doth know that thou art a virtu woman."* Boaz granted Ruth's requ Strange are the ways of Providence. Ne less to say nobody can set aside what G has determined to do.

Scene IV - The Redemption

Before the elders Boaz explain Naomi's situation to the kinsman. Ruth 4 *"... Buy it before the inhabitants, and be fore the elders of my people. If thou w redeem it, redeem it: then tell me, that I m know: for there is none to redeem it besid thee; and I am after thee, And he said will redeem it."* Boaz said, *"What day th buyest the field of the hand of Naomi, th must buy it also of Ruth the Moabitess t wife of the dead, to raise up the name the dead upon his inheritence"* (Ruth 4: But the kinsman declined. This released t delighted Boaz to marry Ruth. Not only R had been redeemed along with Naomi but also became the ancestor of King David fr whom Jesus, the great Redeemer, was come. This is an amazing story of redem tion underlined in a final genealogy.

Ruth's virtues of godliness, humil purity, fidelity, honesty and thoughtfulne remain an exemplary standard for all. B becomes for the Christian a model of Go given strength, honour, graciousness, co tesy and compassion that give encoura ment for becoming a believing gentleman the finest sense of the word.

சிறுவர் பகுதி

விடுவிக்கும் தேவன்

"... குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான் 8:36).

என் அருமைப் பிள்ளைகளே! 2012 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களை வெற்றியுடன் கடக்கச்செய்த வேந்தன் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். உங்களோடு பள்ளியிலும் மாணவ, மாணவிகளின் சில இக்கட்டான சூழ்நிலையிலிருந்து அவர்களை விடுவிக்க உங்களால் இயலுமோ? இயலாதல்லவா? அவர்களை இயேசு வண்டையில் வழிநடத்துவீர்களானால், விடுவிக்கும் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து அவர்களை விடுவிப்பார். இவ்வுண்மையைக் கீழ்க்காணும் கதை விளக்குகின்றது. வாசித்து அறிந்து கொள்ளுவீர்களாக.

மாலை மூன்று மணிக்குப் பள்ளியின் மணி அடிக்கவே, பெருமாணவர்க் கூட்டம் பிரதான வாசலை நோக்கி விரைந்தது. காத்திருந்த பெற்றோர், தங்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துச் சென்றனர். ஜெரி என்ற ஜெரேமியா தன் நண்பர்களுடன் மெள்ள நடந்து வந்துகொண்டிருந்தான். பிரதான வாசலை அடைந்தவுடன் எல்லோரும் பிரிந்தனர். அப்பொழுது அப்பள்ளியின் சுவற்றையொட்டி வேறொரு பள்ளியின் சீருடை அணிந்த ஒரு மாணவன் நிற்பதைக் கண்டான் ஜெரி. அன்று மட்டுமல்ல, பள்ளி தொடங்கின நாள்முதல் இந்நாள்வரையிலும் தினமும் அப்பையனைக் கண்ட ஜெரி, அன்று எவ்வகையிலாகிலும் அவனோடு பேசவேண்டுமென்று எண்ணி அவனிடம் சென்று, "என் பெயர் ஜெரி. நான் மூன்றாம் வகுப்பில் படிக்கிறேன். உன் பெயர் என்னடா?" என்று கேட்டான்.

அவனோ பதில் ஒன்றும் சொல்லாமல், அமைதியாக அவனைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

பின்னும் ஜெரி, "டேய்! உன் பெயர் என்ன? நீ வேறே பள்ளியில் படிக்கிறாயா? உன் பள்ளி ஏன் இவ்வளவு சீக்கிரமாக முடிகிறது?" என்னுமாறுள்ள கேள்விகளை அடுக்கினான்.

அச்சிறுவன் கண்ணீர்மல்க ஜெரியை விட்டுவிட்டு ஓடினான். அவனுடைய செயலால் வியப்படைந்த ஜெரி வீட்டிற்குச் சென்றதும் தன் தாயாரிடம் இதனைக் கூறினான். அவனுடைய அம்மாவும் அச்சிறுவனுக்காக ஜெபிக்கலாம் என்று ஆலோசனை கூறினார்கள்.

மேலும், "ஜெரி, நாளை நீ அவனோடு பேசு. இயேசு அப்பாவின் அன்பையும் சொல்லு. கர்த்தர் உன்னை நடத்துவார்" என்று ஆலோசனை சொன்னார்கள்.

ஆகவே, மறுநாள் தன் தாயின் சொற்படியே ஜெபித்து, தன் பள்ளிக்குச் சென்றான். அன்றும் அச்சிறுவனைக் கண்டான். பள்ளி நேரத்துக்குச் சற்று முன்னதாக ஜெரி தன் வகுப்புக்குக் கடந்துபோனான். மாலை வழக்கம்போல வெளியே வந்த ஜெரி, அச்சிறுவனைக் கண்டு அவனிடம் சென்றான். அன்று அவன் ஓடவில்லை. ஜெரியைப் பார்த்துப் புன்னகை செய்தான். ஜெரிக்கு மிகுந்த மகிழ்ச்சி.

"டேய்! எப்படி இருக்கிறாய்? சாப்பிட்டாயா? உன்னை எப்படிக் கூப்பிடுவது? உன் பெயரைச் சொல்" என்று கேட்டான்.

அச்சிறுவன் முகத்திலே மிகுந்த சோகம் காணப்பட்டது. அவன் கண்கள் குளமாயின. தன்னால் பேசமுடியாது என்பதைச் செய்கை

யால் காட்டினான் அச்சிறுவன். அவனுக்குள் என்ன நடந்தது என்பதை அறிய அவனருகே சென்று, அவன் தோளில் தன் கையைப் போட்டு, தன் கைக்குட்டையால் அவன் கண்களைத் துடைத்தான்.

“டேய்! பேச இயலாதவர்களுக்குக் காதும் கேளாது என்று என் பெற்றோரும், என் ஆசிரியரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். உனக்கோ, காது கேட்கிறதே! இது என்ன ஆச்சரியம்!” என்று வியந்தான் ஜெரி.

“டேய்! உனக்கு இயேசு அப்பாவைப் பற்றித் தெரியுமா?” என்று கேட்டான் ஜெரி.

அவனோ, தெரியாது என்று தலையை அசைத்துக் காட்டினான்.

“வா, நடந்துகொண்டே பேசலாம்” என்று சொல்லி, இயேசு அப்பா செய்த அற்புதங்களையும் அடையாளங்களையும் சொல்லி, “நீயும் அவரை ஏற்றுக்கொண்டால் அவர் உன்னையும் பேசவைப்பார்” என்று விசுவாசத்தோடு அறைகூவினான் ஜெரி.

மகிழ்ச்சியோடு தலையசைத்த அச்சிறுவன், ஜெரியைத் தன் பின்னாலே வருமாறு சைகை காட்டி ஓடினான். ஜெரியும் அவன் பிறகாலே ஓடி, இருவரும் ஒரு வீட்டினுள் நுழைந்தனர்.

புதிய சிறுவனோடு அங்கு வந்ததைக் கண்ட அச்சிறுவனின் தாயார் ஜெரியை நோக்கி, “தம்பி! உன்னை இவன் அடித்து விட்டானா?” என்று கேட்டார்கள்.

“அப்படியெல்லாம் இல்லை, ஆன்ட்டி. இவனுக்குக் காது கேட்கிறது, ஆனால் வாய் பேசமுடியவில்லையே, ஏன் ஆன்ட்டி?” என்று கேட்டான் ஜெரி.

அவனுடைய வாய்மொழியில் காணும் கரிசனை அச்சிறுவனின் தாயின் உள்ளத்தை உலுக்கியது. அவன் ஒரு வருடத்திற்கு முன்னால் ஒரு சாலை விபத்தை நே பார்த்ததாகவும், அந்த அதிர்ச்சியால் அவ பேச்சை இழந்ததாகவும் அச்சிறுவனின் த கூறினார்கள். பயத்தின் மிகுதியால் யா றிலும் கவனம் செலுத்த இயலாததி பள்ளியிலிருந்தும் நிறுத்தவேண்டிய சூழ் உருவானதையும் விளக்கினார்கள். ப வேண்டும் என்ற ஆர்வத்தினால்தான் தி பள்ளியின் வாசலில் நிற்பது அவனது வழ என்பதையும் கூறினார்கள்.

உள்ளம் உடைந்த ஜெரி, இ அப்பாவைப் பற்றி அவர்களிடம் கூறி “ஆன்ட்டி! நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏ கொண்டால் நிச்சயமாக அவர் இவ அற்புதம் செய்வார். “... *குமாரன் உங்க விடுதலையாக்கினால் மெய்யாகவே விடு யாவீர்கள்*” என்று, யோவான் 8:36 இல் எ பட்டிருக்கிறது. தேவ குமாரனாகிய இ விடுவிக்கும் தேவன். நீங்களும் என் ஆலயத்திற்கு வருவீர்களா?” என்று கேட்

அவர்கள் இருவரும் நிச்சய வருவதாக வாக்களித்தார்கள். அவ்வண் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு, அச்சி னையும் அவனது தாயாரையும் அழைத் சென்றான் ஜெரி. ஆராதனை முடிவில் போ ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்தார். விடுவிக் தேவ குமாரனாகிய இயேசு கிறி அச்சிறுவனின் நாவின் கட்டுகளை அவி தார். அவன் முன்போலவே பேசத் தொட னான். தேவனின் செயலைக் கண் அனைவரும் ஆச்சரியப்பட்டு, அவரு நன்றியைத் தெரிவித்தனர்.

என் அன்புப் பிள்ளைகளே! ஒருவே நீங்களுங்கூட இப்படிப்பட்ட பிரச்சினை லுள்ள பிள்ளைகளைச் சந்திக்கக்கூ அசட்டையாக இருந்துவிடாதீர்கள். ஒருவே விடுதலை உங்கள்மூலமாக அவர்களு கிட்டலாம். ஆகவே, அனைவரிட இயேசுவின் அன்பைப் பகிர்ந்துகொள்ளுங்

சாட்சிப்பகுதி

ஜெபமே ஜெயம்

"எனக்கு உண்டான நெருக்கத்திலே த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை க்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்தி ருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் ப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் விகளில் ஏறிற்று" (சங்கீதம் 18:6).

என் தகப்பனார் B & C மில்லில் வேலை ய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய ரோதிகள் அவருக்கு எதிராக அசுத்த விகளை ஏவிவிட்டனர். அவர் சுயபுத்தியை ழந்து, ஒரு பைத்தியக்காரனைப்போலத் தெரு தெருவாக அலைந்து திரிந்தார். அப்பொழுது ஆவிக்குரிய சபைக்கு அவரை அழைத்துச் சென்றோம். அங்கிருந்த சகோதரர் ஒருவர் அவருக்காக ஊக்கமாக ஜெபித்தார். முதற்கண் அசுத்த ஆவிகள் அவரை அதிகமாக அலைக்கழித்து, பின்னர் ஒவ்வொன்றாக அவரை விட்டு விலகின. அவருக்குள் சுயபுத்தி திரும்பினது.

மீண்டும், கம்பெனியில் சேர்ந்து வேலைசெய்தார். இந்த அற்புதம் எங்கள் வீட்டில் நிகழ்ந்ததால் குடும்பத்திலுள்ள அனைவரும் ஆச்சரியப்பட்டு, நாங்கள் அந்த ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்று வந்தோம். எங்கள் பாவங்களை அறிக்கைசெய்து, இயேசுவை எங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். ஞானஸ்நானத்தில் அவரோடு உடன்படிக்கை செய்துகொண்டோம். இயேசு எங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்தார். நாங்கள் ஜெபித்தபோது இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். கிராமங்களுக்குச் சென்று, நாங்கள் இயேசுவுக்கு ஊழியஞ்செய்தோம். அப்பொழுது, குழந்தையில்லாத ஒரு சகோதரி எங்கள் ஜெபத்தை விரும்பிக் கேட்டாள். என் கணவர் அந்தச் சகோதரிக்காக ஜெபித்தார். குழந்தை இன்றி இருந்த அந்தச் சகோதரி, கர்ப்பமுற்றாள். இதைக் கண்டு அந்த ஊரிலுள்ள எல்லாரும் அதிசயப்பட்டார்கள்.

எங்கள் வீட்டின் அருகே வாழ்ந்த ஒரு சகோதரிக்கு அசுத்த ஆவிகளின் தொந்தரவு வந்தது. அவளும் சாலைகள் வழியாக ஒரு பைத்தியக்காரியைப்போல அலைந்து திரிந்தாள். தெருவில் வந்த ஒரு கார் அவள்மீது மோதினதால் அவள் விபத்துக்குள்ளானாள். என் கணவர் அவளுக்காக இயேசுவை நோக்கி ஊக்கமாக ஜெபித்தார். அவளுக்குள் இருந்த அசுத்த ஆவிகள் இயேசுவின் நாமத்தைக் கூறியபோது ஓடின. அவளுக்கு ஏற்பட்ட எலும்பு முறிவுகளும் சீக்கிரமாகச் சுகமடைந்தன.

சரீரத்தில் ஏற்படும் சுகமும் அசுத்த ஆவிகளின்மீது விசுவாசிகளுக்குக் கிட்டும் வல்லமையும் பெரிதல்ல. அதைக்காட்டிலும் பெரியது, இயேசு எங்கள் வாழ்க்கையை முற்றும் மாற்றிப்போட்ட மெய்ச்சாட்சியேயாகும்.

எங்களது இரட்சிப்புக்குப் பின்பு உண்மையோடும் நேர்மையோடும் நாங்கள் வாழ்ந்துவருகிறோம். எங்கள் வீட்டில் காணப்பட்ட சண்டைகள் முற்றும் ஒழிந்துபோயின. இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டபின் இவ்வுலகம் தரக்கூடாத சமாதானத்தை நாங்கள் பெற்றுள்ளோம்.இத்தகைய மாற்றத்தை எங்கள் வாழ்க்கையில் தந்தருளிய இயேசுவுக்கு எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

இதை வாசிக்கும் அன்பர்களே! இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வெற்றியைத் தருவார். பிசாசுகள் உங்களைக் கண்டு பயந்து ஓடும். நீங்கள் ஜெபிக்கும்போது அற்புதங்களைக் காண்பீர்கள். உங்கள் வாழ்க்கையிலே உண்மையான சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

சாந்தி, ஓட்டேரி

சபையின் செய்திகள்

2012, ஜூன் திங்கள் 4 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அகில இந்திய அப்போஸ்தல கிறிஸ்தவ சபை ஊழியர்களும், தலைமைச் சபையின் ஊழியர்களும் இணைந்து தலைமைச் சபையில் கூடினர்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், 1 கொரிந்தியர் 9:27 ஐ மையமாகக் கொண்டு, "ஊழியர்கள் தங்கள் ஊழியத்தின் பண்புகளை உணர்ந்து ஊழியஞ்செய்ய வேண்டும்" என்றுள்ள தலைப்பில் மூன்று குறிப்புகளைப் பேசினார்.

ஊழியர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள்ளதை உணர்தல் வேண்டும் (1 கொரி.9:27) என்றும், தாங்கள் தேவனுக்கு ஆகாதவர்களாய்ப் போகாதபடி எச்சரிக்கையோடு ஊழியஞ்செய்யவேண்டும் (1 கொரி. 9:27) என்றும், தங்கள் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தி, கட்டுப்பாடோடு ஊழியஞ்செய்ய வேண்டும் (1 கொரி.9:27) என்றும் போதித்தார்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்களும், அப்போஸ்தலர் 20:24 ஐ மையமாகக்கொண்டு, "ஊழியர்கள் தங்கள் முடிவைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்" என்றுள்ள தலைப்பில் மூன்று குறிப்புகளைப் போதித்தார்.

பின்னர், ஊழிய அழைப்புப் பெற்று, 2011-12 ஆம் ஆண்டில் இறையியல் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு ஜெபத்துடன் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தலைமைச் சபையோடு ஐக்கியங் கொண்ட மற்ற சபைகளில், தேவனுக்கென்று முழுநேர ஊழியஞ்செய்யும்படி சிலர் பிரித்தெடுக் கப்பட்டனர். ஞானஸ்நானமும் திருவிருந்தும் கொடுக்கும்படியும் சில ஊழியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. ஊழியர்க... குழந்தைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்...

திருவிருந்து ஆராதனைக்குப் பி... தலைமைப் போதகரது ஆசீர்வாத ஜெபத்... மதிய உணவு வழங்கப்பட்டு, கூ... நலமுடன் முடிந்தது.

பிறந்தநாள் கவலைகள் மரணத்தை ஏற்படுத்துவதாக ஆய்வில் தகவல்

பிறந்தநாள் அன்று ஏற்படும் கவலை யினால், 60 வயதுக்கு மேற்பட்டோரு... மரணம் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரி... கின்றன. சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்... ஆய்வு நிறுவனம், கடந்த 40 ஆண்டுகளாக, ... லட்சத்துக்கும் அதிகமானவர்களிடம் ... ஆய்வு நடத்தியது. பிறந்தநாள் அன்று ஏற்ப... கவலை மற்றும் மன அழுத்தத்தால், ... வயதுக்கு அதிகமானவர்களுக்கு மாரடை... பக்கவாதம் போன்றவை ஏற்படுகின்றன.

60 வயதுக்குக் குறைவானவர்களு... இதுபோன்ற பாதிப்புகள் குறிப்பிட்... சொல்லும்படியாக இல்லை. 60 வயது... மேற்பட்ட பெண்களுக்கு, பிறந்தநா... வருத்தத்தின்போது, பக்கவாதம் ஏற்படுகிற... பிறந்தநாளையொட்டி ஏற்படும் வருத்... பலரைத் தற்கொலைக்குத் தூண்டுகிற... இன்னும் சிலருக்குப் புற்றுநோயையும் தோ... விப்பதாக இந்த ஆய்வறிக்கை குறிப்பி... டுள்ளது. இந்த ஆய்வை மேற்கொண்ட ஜ... பல்கலைக்கழக மனோதத்துவ நிபு... விலெட்டா குறிப்பிடுகையில், "பிறந்தநா... பலர் மரணமடைகின்றனர் என்ற எங்... ஆராய்ச்சியைப் பலர் இன்னும் அங்கீகரி... வில்லை. ஆனால், பிறந்தநாளில் ஷேக்ஸ்பி... போன்றவர்கள் மரணமடைந்துள்ளதை, நாங்... ஆதாரமாகக் காட்டுவோம்" என்றார்.

(தினமலர் 11-06-20...

GOD'S unchanging WORD



For feelings come and feelings go,
And feelings are deceiving;
My warrant is the Word of God,
Nought else is worth believing.

Though all my heart should feel condemned
For want of some sweet token,
There is One greater than my heart
Whose Word cannot be broken.

I'll trust in God's unchanging Word
Till soul and body sever;
For, though all things shall pass away,
His Word shall stand for ever.

Reg.Number TN/CCN/385/2012-2014. Licence to the post under WPP No.TN/CCN/85/2012-2014
Reg. Under Regis. of News Paper for India No.1295/57, Posting date 29th & 30th of every month
Date of Publication: Monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrika Channel, Egmore, Chennai - 600 008.

Book - Rs.5/-

1. விசுவாசிகளின் சாட்சிகள்
2. அதிசயமான தேவ கிருபை
3. உத்தம சாட்சிகள்
4. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
5. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
6. ஆவிக்குரிய வேத சத்தியங்கள்
7. தசமபாகம் கர்த்தருக்கு உரியன
8. Jesus met me in jail
9. Tithe belongs to the Lord
10. Spiritual truths from the Bible
11. My experiences

Book - Rs.10/-

12. கர்வாலி மரம்
13. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
14. கிறிஸ்துமஸ் செய்திகள்
15. இயேசு உயிர்த்தெழுந்தார்
16. நீதியின் சூரியன்
17. பரதேசிகளாகிய நாம்
18. நித்திய பிரதான ஆசாரியர்
19. சபை சபைதானா?
20. சிலுவைக்கு அப்பால்
21. வணக்கம்
22. ஜீவனுள்ள சாட்சிகள்
23. அற்புத சாட்சிகள்
24. சாட்சிகள்
25. நன்றியுள்ள சாட்சிகள்
26. கல்லூரியில் அற்புதங்கள்
27. நற்செய்தி கதைகள்
28. தீப ஒளி
29. அந்தக் கடிதங்கள்
30. அந்த மயில்கள்
31. கனமான ஊழியம்
32. வெளிச்சம்
33. ஆத்தும நேசர்
34. ஐக்கியம்
35. கொடி
36. இன்னும் சந்தேகமா?
37. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
38. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
39. முதலாம் ஆதாம்
40. ஆசீர்வாதங்களின் திறவுகோல்.
41. நீரே என் மேய்ப்பர்
42. தேவ ஊழியம்
43. எனது அநுபவங்கள்
44. Eternal grace
45. The Star
46. The new year
47. Spiritual questions
48. The timely warning
49. The blessing
50. Your response to the Cross
51. Springs in the valley
52. A narrow escape from hell

Book - Rs.15/-

53. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்

Book - Rs.20/-

54. வாக்குத்தத்தச் செய்திகள் 2004
55. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-1
56. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-2
57. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம்-4
58. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
59. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
60. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-1
61. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள்-2
62. ஒருவருக்கொருவர்
63. கர்த்தருக்குப் பரிசுத்தம்
64. Successful ministers of the Lord
65. Messages of God's blessings-Part 1
66. Messages of God's blessings-Part 2

Book - Rs.25/-

67. வாக்குத்தத்தச் செய்திகள் 20
68. வாக்குத்தத்தச் செய்திகள் 20
69. வாக்குத்தத்தச் செய்திகள் 20
70. வாக்குத்தத்தச் செய்திகள் 20
71. வாக்குத்தத்தச் செய்திகள் 20
72. வாக்குத்தத்தச் செய்திகள் 20
73. வேத ஒழுங்கின்படி தேவ
74. வேத ஒழுங்கின்படி தேவ
75. வேத ஒழுங்கின்படி தேவ
76. தேவனுடைய ஆசீர்வாதங் பெற்றுக்கொள்ளுங்கள்
77. கிறிஸ்துமஸ் செய்திகள் (பகுதி
78. A good soldier of Jesus Christ

Book-Rs.30/-

79. ஜெபத்தின் வல்லமை
80. நல்ல போர்ச்சேவகன்
81. ஆவிக்குரிய தேவசெய்திகள்
82. வேதாகமத்திலிருந்து எடுக் முத்துக்கள் (பகுதி-1)
83. Gleanings from the Bible (Pa
84. வேதாகமத்திலிருந்து எடுக் முத்துக்கள் (பகுதி-2)
85. Gleanings from the Bible (Pa
86. வாக்குத்தத்தச் செய்திகள் 2011
87. கிறிஸ்துவின் சிலுவை மரண மற்றும் உயிர்த்தெழுதலின்

Book-Rs.100

88. உன்னதப்பாட்டு (வேதபாட
89. வெளிப்படுத்தின விசேஷம் (வே
90. The Revelation (Bible Study
91. விடுதலைத் தூதன் ஆண்டு (ஜனவரி முதல் டிசம்பர் வ (2009, 2010, 2011)

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acalivechurch.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org
Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728835/Cell:9841429079